செ. கு. எண்: 38 நாள்: 07.03.2019

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் ''சர்வதேச மகளிர் தின'' வாழ்த்துச் செய்தி

பெண்களின் சிறப்பினையும், உரிமைகளையும் உலகிற்கு பறைசாற்றும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் திங்கள் 8–ஆம் நாள் சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுகின்றது. இந்த இனிய நாளில் அனைத்து மகளிர்க்கும் எனது உளங்கனிந்த மகளிர் தின நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

''மங்கையராய்ப் பிறப்பதற்கே – நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா''

என்று பெண்ணின் பெருமையை போற்றிப் பாடியிருக்கிறார் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள். அத்தகைய சிறப்புமிக்க பெண்களின் வாழ்வு மேன்மையுற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, பெண் சிசுக் கொலையைத் தடுத்திட தொட்டில் குழந்தைத் திட்டம், பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம், வளரிளம் பெண்களுக்கு விலையில்லா சானிட்டரி நாப்கின் வழங்கும் திட்டம், படித்த ஏழைப் பெண்களுக்கு திருமண நிதியுதவியுடன் திருமாங்கல்யத்திற்கு தங்கம் வழங்கும் திட்டம், அரசு அலுவலகங்களில் பணி புரியும் கர்ப்பிணி பெண்களுக்கு ஒன்பது மாத காலம் மகப்பேறு விடுப்பு, இல்லத்தரசிகளுக்கு விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின்விசிறி வழங்கும் திட்டம், இந்தியாவிலேயே முதன்முறையாக அனைத்து மகளிர் காவல் நிலையங்களை அமைத்தது, இந்தியாவிற்கே முன்னோடியாக பெண்களுக்கு எதிரான குற்றங்களை களைந்திட 13 அம்ச திட்டம், வேலைக்குச் செல்லும் மகளிர் பாதுகாப்பான வசிப்பிடத்தில் தங்கிட பணிபுரியும் மகளிருக்கான விடுதி, வீர தீர பெண்மணிக்கு கல்பனா சாவ்லா விருது, சிறந்த பெண்மணிக்கு அவ்வையார் விருது, உழைக்கும் மகளிர் பயன்பெறும் வகையில் அம்மா இருசக்கர வாகனத் திட்டம் போன்ற பல்வேறு முன்னோடி திட்டங்களை மகளிர் மேம்பாட்டிற்காக செயல்படுத்தி வருகிறது.

மேலும், பெண் உரிமை, பாலியல் வன்கொடுமை மற்றும் பணியிடங்களில் உருவாகும் அசாதாரண நிலை குறித்து புகார் தெரிவிக்க பெண்களுக்காக பிரத்யேகமாக தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் இணைய தளம் மூலம் "புகார் பெட்டி (SHe-Box)" ஏற்படுத்தப்பட்டு சமூக நலத்துறை அலுவலர்களால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. வன்முறையால் பாதிக்கப்படும் பெண்களுக்கு மருத்துவ உதவி, சட்ட உதவி மற்றும் ஆலோசனைகள் வழங்கிட ஒருங்கிணைந்த சேவை மையம் (One Stop Centre) 32 மாவட்டங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், பெண்களுக்கான சமூக நலத்திட்டங்கள்

மற்றும் சமூக பாதுகாப்பு சட்டங்கள் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தும் விதமாக விழிப்புணர்வு பதாகைகள், சுவரொட்டிகள், வானொலி பிரசாரங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களின் அவசரகால அழைப்புகளுக்கு காவல் துறை, மருத்துவம், சட்ட உதவி, உளவியல் ஆலோசனை மற்றும் அரசின் திட்டங்கள் போன்ற சேவைகளை உடனடியாக பெறும் வகையில் 24 மணி நேரமும் செயல்பட கூடிய மகளிர் உதவி மையம் மூலம் 181 என்ற கட்டணமில்லா தொலைபேசி அமைக்கப்பட்டுள்ளது.

மகிளா சக்தி கேந்திரா (Mahila Shakti Kendra) என்ற மத்திய – மாநில அரசின் புதிய திட்டம் மூலம் மாநிலம், மாவட்டம் மற்றும் வட்டாரம் ஆகிய மூன்று நிலைகளில் கிராமப்புற பெண்கள் அரசின் நலத்திட்டங்களை பெறுவதற்கான வழிமுறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் மூலம் தங்களுக்கான திட்டங்கள் மற்றும் சேவைகளை பெற்று பொருளாதார மேம்பாடு அடைய வழிவகை செய்கிறது. இத்திட்டம் தற்போது 13 மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது.

2019–ஆம் ஆண்டு “பெண் குழந்தைகளை பாதுகாப்போம், பெண் குழந்தைகளை கற்பிப்போம்” என்ற மத்திய அரசின் திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தியதற்காக தமிழ்நாட்டிற்கு சிறந்த மாநில விருதும், திருவண்ணாமலை மாவட்டத்திற்கு சிறந்த மாவட்ட விருதும், இத்திட்டத்தின் நோக்கங்களை சிறப்பாக முன்னெடுத்து, குழந்தை திருமணத்தை தானே தடுத்து நிறுத்தியதற்காக திருவண்ணாமலை மாவட்டத்தை சார்ந்த செல்வி நந்தினி என்பவருக்கு உள்ளூர் சாதனையாளர் விருதும் வழங்கப்பட்டுள்ளன.

பெண்கள் முன்னேற்றத்திற்காகவும், பெண்களுக்கான அதிகாரத்தை பாதுகாக்கும் விதமாக பல நல்ல திட்டங்களை செயல்படுத்தி வருவதற்காகவும், தேசிய அளவிலான 2019–ஆம் ஆண்டிற்கான நாரி சக்தி புரஸ்கார் விருதுக்கு (Nari Shakti Puraskar Award) தமிழ்நாடு அரசு தேர்வு செய்யப்பட்டுள்ளது.

பெண்கள் தன்னம்பிக்கையுடனும், விடாமுயற்சியுடனும் செயல்பட்டு, வாழ்வில் சோதனைகளை உறுதியுடன் எதிர்கொண்டு, இருளை நீக்கும் ஒளி விளக்காக பாரினில் பெண்கள் உயர்ந்து விளங்கிட வேண்டும் என்று வாழ்த்தி, எனது உளங்கனிந்த மகளிர் தின நல்வாழ்த்துகளை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக் கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**